ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

**दिनयामिन्यौ सायं प्रातः शिशिरवसन्तौ पुनरायातः ।**

**कालः क्रीडति गच्छत्यायुस्तदपि नमुंचत्याशावायुः ॥**

**दिनयामिन्यौ** - பகலும் இரவும்

**प्रातः** - விடியற்காலத்திலும்

**सायं** - ஸாயங்காலத்திலும்

**आयातः** - அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. இவ்விதமே

**शिशिरवसन्तौ** - சிசிருது வஸந்தருது முதலான ருதுக்களும்

**आयातः** - அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. இதைக்கவனித்தால்

**कालः** - காலமானது

**क्रीडति** - விளையாடுவதுபோல் தோன்றுகிறது

**आयुः** - ஆயுளும்

**गच्छति** - போகின்றது

**तदपि** - இவ்விதம் அநித்தியமாயிருந்தும்

**आशावायुः** - இச்சையென்னும் பெருங்காற்றானது

**नमुंचति** - விஷயங்களை விடுகிறதில்லை

சகல காரியங்களுக்கும் முக்கிய ஆதாரமாயிருப்பது காலம் அதின் ஸ்திதியை அடிமுதல் கவனித்தால் அடிக்கடி மாறுதலையடைந்து நிலையற்றதாயிருக்கின்றதென்றும் பிராணிகளின் ஆயுளும் இவ்விதமே ஸ்திரமில்லாமலிருக்கின்றதென்பதையும் இதினால் கூறுகின்றார்.

காலத்தின் அவயவமான பகல் இரவு இவ்விரண்டும் ருதுமுதலியவைகளும் நிலையில்லாமல் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றன இதைப் பார்த்தால் காலமென்பது இந்திர சாலவித்தை செய்யும் மாயாவியைப்போல் விளையாடுகிறதாகத் தோன்றுகிறது. இக்காலத்தைப்போல் ஜனங்களின் ஆயுளும் நிலையறறதாய் நாசத்தை யடைகின்றது. இவைகளை எல்லாம் பிரத்தியக்ஷமாயறிந்தும் விஷயங்களிலுள்ள தோஷங்களைச் சற்றும் கவனியாமல் அவைகளில் மோகத்தையடைந்து ஜன்மாவைக கெடுத்துக் கொள்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தையே

**भिक्षाशनं तदपि नीरसमेकवारं शय्याच भू परिजनो निजदेहमात्रम् ।**

**वस्त्रं विशीर्णशतरंध्रमयोच कथा हाहा तथापि विषया न परित्यजन्ति ॥**

என்று ஒரு பெரியாரும் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் விஷயதோஷங்களை நன்கு கவனித்து மோக்ஷஸாதனமானவைராக்கியத்தைப்பெறவேண்டும்.

456

# ஆர்யதர்மம்.

க௯ய-ஷூ ஆவணி-மீ க௫௨

## வேதாந்த சித்தாந்தம்.

(396-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

இப்படிப்பட்ட ஜீவன் முத்தியை விசிஷ்டாத்வைதிகளும், துவைதிகளும் என் ஒப்பிலரெனில், பிரமநிஷ்டர்களிடத்தும் பல விவகாரங்களிருத்தலால் அவ்விடம் அவருக்கு முத்தியுண்டென்பது உபசார மொழியென்று அவர் கொள்கையாம். "சாக்ஷியும் சேதனனும், தனித்தவனும், நிர்குணனும்" என்றும்; "அம்சமற்றது, தொழிலற்றது, சாந்தமாயுள்ளது, மாசற்றது. பற்றற்றது," என்றும் தொடங்கிய பல வசனங்களுக்கு உண்மையிற் குணமுள்ள வஸ்துவே பொருளெனக்கொண்டு நிர்குணமான வஸ்து இல்லையென்று சொல்வதுபோல் தம்மதிகாரத்திற் கெடாத ஜீவன் முத்தியையும் விரும்பாதொழிந்தார். இதனால் அவர் அறிவில்லாதவரென்று சொல்லப் பொருந்தாது. சில அத்வைதிகளும் "அவன் அங்குச் செல்வான், உண்பான், கிரீடைகளைச்செய்வான், தோழர்களுடன் கூடுவான்." என்பதாதிய வேத வாக்கியங்களைப் பிரமலோகத்தே யனுபவிக்கும் போக விஷயங்களாக அர்த்தங்கொள்ளாது இவ்விடத்தே கிடைக்கும் ஜீவன் முத்தியே அதற்கும் பொருளெனக்கொண்டு ஒருவித விதி விலக்குகளுமின்றி மனம் போனவழி திரிகின்றார்கள். உலகத்திலே "எவனைக்கண்டு உலகமஞ்சாது, எவன் உலகத்திற்கஞ்சான், எவன் மகிழ்வு, அழுக்காறு, அச்சம் என்பவைகளை நீத்தவன், அவன் ஜீவன் முத்தன்" என்று தொடங்கிய பல வசனங்களால் ஏற்படும் ஜீவன்முத்தியை இல்லையெனச்சொல்ல எவராலும் முடியாது.

ஜீவன் முத்தனுக்கு விவகாரங்களிருப்பினும், கொளுத்திய வஸ்திரமும், வெதும்பிய வித்தும் போலத் தோற்ற மாத்திரையாயிருப்பினும் புனர் ஜன்மத்திற்குக் காரணமாகாது. அவன்

இவ்வுடலை யொழித்து வேறு உலகங்களுக்குச் செல்வதுமில்லை. அவனுடைய உயிர் அங்ஙனமே இடமாய் நின்றுவிடுகின்றதெனப் பெரியோர் கருத்தென்க. இங்ஙனமிருக்க "அவன் பிதுர்லோகத்தை விரும்பினால் அவன் இச்சைக்கிணங்கிப்பிதுர்க்கள் அங்கே தோன்றுவார்கள்" என்று தொடங்கிய வசனத்தால் பிரமலோகத்தையடைந்த முத்தனுக்கும் அணிமாதி அஷ்ட சித்திகளிருந்தனவென்று வெளியாகின்றமையால், இங்குதானே பிரமநிஷ்டனாகலாம். பிரத்தியக்ஷ பலங்கிடைப்பதால் ஜீவன் முத்தியை உண்மை என்றொப்புவோம். பிரமநிஷ்டர்களிடத்தில் ஓர்வித சித்தியையும் கண்டிலேம். முற்காலத்தில் வசிஷ்டர் முதலாயினோரிடத்து அணிமாதி சித்திகள் காணப்படுதலால், அவர்கள் ஜீவன் முத்தரென்றே சொல்லுவோம். சித்திகளன்றோ முத்திக்கிலக்கணம் யாதொரு சித்திகளுமின்றி நான் பிரமநிஷ்டனென்றால், அதனால் முத்தி கிட்டுமோ முத்தியோ சகுணனாகிய ஈசுவரனருளின்றிக் கூடாது. ஆதலால் சகுணனான ஈசுவரனை வழிபடுதல் யோகம் முதலியவற்றை வெறுத்து நிற்கும் அத்வைதிகளுக்கு முத்தியுண்டோ அவர்களுக்கு வார்த்தைகளில் மாத்திரம் முத்தியுண்டேயன்றிக் காரியத்திலில்லை என்கின்றார்கள். அவர்களுக்கு நாம் அளிக்கும் விடையாவது,—ஜீவன் முத்திக்கு அணிமாதி சித்திகள் இலக்கணங்களாகா. சமம் தமம் முதலிய குணங்களே அதற்கிலக்கணங்களாகும். வசிஷ்டாதியோரதிகாரிகளாதலால் அவரிடம் சித்தியும் முத்தியுங்கூடிற்று. அவர் முற்பவத்திலே சகர்மம் நிஷ்காமமென்னும் இருவகைத் தவங்களைச் செய்தவர். நிஷ்காமமென்னும் ஓர்விதத்தவத்தையே செய்தவர்களுக்குச் சித்திகளில்லா முத்தியே யுண்டாகும் சித்திகளோ அநதிகாரிகளுக்கு மோக்ஷ விரோதமே. அன்னபூர்ணோபநிடதம் முதலிய உபநிடதங்களில், முத்தர்களுக்குச் சித்தியில் விருப்பமிராதென்பது வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருப்பதால், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள் பிரமத்தை விசாரித்தல் வேண்டும். பூமியிலே செய்த புண்ணியங்களின் பலத்தை அவன் பிரமலோகத்திலனுபவிப்பான். ஆதலினாற்றான் அவன் உடன் முத்திபெற்றவனல்லன். சில பெரியோர்கள் காலங்கழித்து வருவதாலும், சுகதுக்காதி சம்பந்தமுள்ளதாதலாலும் கிரமமுத்தியினுமுடன் முத்தியே சிரேஷ்டமெனக்கொண்டு அதற்கென நிர்க்குணத்தியானஞ் செய்து வரு

கிருர்கள். ஓர் சமயம் ஏதேனுஞ் சங்கற்பத்தால் ஓர் சித்தி உண்டாயின், அது தமது நிஷ்டைக்குக்குறைவெனத் தமது சத்தியை வெளியிடார். இப்பொருளே பிரமசூதிரங்களில் அடங்கியிருக்கின்றது. யாதொரு சித்திகளுமில்லாமல் சமஸ்த விஷய வியாபாரங்களு மொடுங்கிப் பிரம நிஷ்டையடைந்தவனுக்கு உடனே சம்சார பந்தம் விடுமாதலால், ஜீவன் முத்தியுண்டென்பதே துணியாயிற்று. இவ்வித ஜீவன் முக்தியைப்பெற முயலவேண்டியதே மானிடர்கட்கு இயற்கைக் கடமை யென்பதையுமறிவித்து இவ் விஷயத்தை முடித்துக்கொள்ளுகிறோம். சுபம் !

உப பத்திராதிபர்.

---

# தீண்டாமைக்கு வகாலத்து.

(402ஆவது பக்கத் தொடர்ச்சி.)

ஆதிசங்கரர் வாஸ்தவத்தில் என்ன செய்தார் அல்லது செய்யாதிருந்தார் என்று தீர்மானமாகச்சொல்ல நம்மிடத்தில் எல்லா ஆதாரங்களும் இல்லை. சண்டாளன் என்றவார்த்தைஎந்தவிடத்தில் இருக்கிறது அதன் அர்த்தமென்ன என்றும் நமக்குத் தெரியாது என்று ஆதிசங்காருக்குக்கொஞ்சம் மரியாதை கொடுக்கிறார். ஆகா என்ன ஆச்சரியம்! ஆதிசங்கரர் என்னசெய்தார் என்னசெய்யவில்லையென்றுநம்மிடத்தில் எல்லா ஆதாரங்களும் இல்லையென்று சொல்வதுகொஞ்சமும் பொருந்தாது சண்டாளன் என்ற வார்த்தைக்குஅந்தவிடத்தில் தீண்டாதவனென்று தான் அர்த்தம். அதில்லையென்று சொல்ல இவராலும் மற்று எவராலுமியலாது.

சண்டாளன் என்பதற்குப் பாபி என்று அர்த்தமுண்டு. ஆனல் பாபியும் தீண்டாதவனென்றால் நாமும் தீண்டாதவனென்கிறார். இதுசரி, அவ்விஷயத்தில் நாம் தீண்டாதவர்கள் தான். இங்கு தீண்டாதவன் என்பதற்கும் பல அர்த்தமுண்டாகையால் இந்தத் தீண்டாமைக்கும் அதற்கும் அர்த்தபேதம் உண்டென்பதைத் தெரிந்துகொள்ளட்டும்.

பிறகு தீண்டாமை பொல்லாத வழக்கமென்றும் அதை ஒழித்து விடவேண்டும் என்றும் மிகவற்புறுத்துகிறார். இவ்விதம் மதவிஷய மின்னதென்பதையே கொஞ்சமும் தெரிந்து கொள்ளாத இவர் இவ்வாறெல்லாம் சொல்வது நியாயமே இல்லை தீண்டாதவர்களைத் தொட்டால் பூச்சி ஒட்டிக்கொள்வதுபோல் நினைக்கிறார்களென்கிறார். பூச்சி ஒட்டிக்கொள்வதாய் ஒருவரும் நினைக்கவில்லை. மற்று அவர்களை அணுகினால் சாஸ்திரங்களின் விதியையும் ஈசனின் கட்டளையையும் மீறின மகாபாபப் பூச்சி ஒட்டிக்கொள்ளுமென்று பயந்தான் உண்மையில் அவர்களை அணுகாததால் அவர்களது உயிரைத்தன்னுயிர் போல்நினைக்கிறதில்லை. தேகம்தான்விலக்கம் அவனது ஆன்மாவும் அவனது சுகதுக்கமும் நம்முடையது தான் என்று ஆர்யர்கள் பாவித்தார்கள். இத்தகையோர்களின் முழக்கத்தால் தான் இப்போது உலகம் இவ்வளவு சீர்கேட்டிற்கு வந்துவிட்டது. இனனும் என்ன அனர்த்தங்கள் விளையுமோ; எல்லாவற்றையும் நாமனுபவிக்கவேண்டியது தான். ஏதோ முன் ஏதோ சில காரணங்களைக்கொண்டு சிலரை ஒதுக்கி வைத்ததற்காக அவர்களின் ஸந்ததியாரும் அக்குற்றத்தைச் செய்தவர்களாகப் பாவிக்கப்படுமா என்பதெல்லாம் மதவாஸனையற்றவரின் கூற்று. பிறப்பில் வித்யாஸம் ஏற்படுவது முன் ஜன்ம பாப புண்யங்களின் பலனைப் பொருத்ததென்று ஆஸ்திகர்களிடமிருந்து தெரிந்து கொண்டால் இவ்வளவு பேச்சுக்கு இடமேற்படாது. இனியும் இதற்குமேல் எழுதினால் அப்போதும் ஆஸ்திகர்கள் பார்த்திருக்கமாட்டார்கள்

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

# பிருதுராஜ சரிதம்.

முகவுரை,

புண்யபூமியாகிய இந்தப் பரதகண்டத்தில் நீதிமுறை வழுவாது அரசுபுரிந்த மன்னர்கள் பதினாறுபேர்கள் என்று மஹாபாரதம் புகழ்கின்றது. அவர்களுடைய சரித்திரம் ஒவ்வொன்றும்

ராஜபக்தி, ஈசுவரபக்தி, ராஜநீதி, பெண்கள் கற்புநிலை, மோக்ஷம் முதலான அரியவிஷயங்களை விரிவாய்ப் போதிக்கின்றது. அவற்றுள் பிருதுராஜனின் சரித்திரம் மேற்கூறிய விஷயங்களை நன்கு போதித்து, ஜனங்கள் இம்மண்ணுலகில் நடந்துகொள்ளவேண்டிய வழியையறிவித்து, விண்ணுலகில் சாசுவதமான சுகம்பெறுவதற்கு வழிகாட்டியாய் விளங்குகின்றது. இச்சரித்திரநாயகருக்கு, வைன்யர், பிருது, ஆதிராஜன் என்று மூன்று திருநாமங்கள் உண்டு. வேனராஜனுக்குப் புதல்வனானதால் வைன்யனென்றும் உலகத்தை சீர்படுத்தியதலால் பிருது என்றும், ஜனங்கள் ரஞ்சிக்க அரசுபுரிந்தவர்களில் முதல்வனானதால் ஆதிராஜன் என்றும், அத்திருநாமங்கள் பொருள்வாய்ந்தனவையாகின்றன. காளிதாஸர் வடமொழியில் தாமியற்றிய குமாரஸம்பவத்தில் பிருது மஹாராஜன் பெருமையை வெளிக்காட்டியுள்ளார். அதாவது முன்பு பிருதுச் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி மற்றைய மலைகளெல்லாம், இந்த இமயமலையைக் கன்றாகவும், மஹா மேருபர்வதத்தைக் கறக்கத் தெரிந்த இடையனாகவும் ஏற்படுத்திக்கொண்டு பூமியிலிருந்து ஒளியேறிய இரத்தினங்களையும் மஹிமைபொருந்திய ஓஷ (விரை) திகளையும் கறந்தன. இவ்விதமான சரித்திரத்திற்குப் பல வருஷங்களாய் ஆதாரங்களைத் தேடி ஹரிவம்சம், ஸ்ரீபாகவதம், பாரதம், விஷ்ணுபுராணம் இவற்றை நன்கு ஆராய்ந்து மாணவர் முதல் முதிர்ந்தவர் வரை எளிதில் அறியும்படி ஏதோ என் சிற்றறிவிற்கெட்டியவரை எழுதியுள்ளேன். சிற்றறிவின் தன்மைக்கேற்ப பிழை பல பொருந்தியிருத்தல் கூடும். அவற்றை அன்பர்கள் மன்னித்துச் சாரமானவற்றை ஏற்றுக்கொள்வார்களாக.

## 1-வது அத்தியாயம்.

### பிருதுராஜனின் முன்னோர்களின் வரலாறு.

இவ்வுலக சிருஷ்டியின் தொடக்கத்தில் அவதரித்த ஸ்வாயம்புவ மனு என்பவர், கடல்சூழ்ந்த பூமியனைத்தையும் நீதிமுறை வழுவாமல் அரசாண்டு வந்தார். பர்ஹிஷ்மதீ என்பது அவருடைய தலைநகரம். அவர் எக்காலமும் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளைப் பணிந்துவந்தார்.

## பிருதுராஜனின் தகப்பனான வேனனின் ஜனனம்.

அவருடைய வம்சத்தில் உதித்த யாவருமே, திருமாலையே ஆராதித்துத் தமது உயர்ந்த நற்குணங்களால் புகழ்பெற்று விளங்கினர். அவர்களில் அங்கன் என்ற மஹாராஜன் மிருத்யுவின் மகளான சுநீதா என்பவளை மணந்து அவளிடம் வேனன் என்ற புத்திரனையடைந்தான்.

## வேனனின் துஷ்டத்தனம்.

அவனோ தன் முன்னோர்களின் நற்குணங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட குணத்தையுடையவன். தர்மத்தைப் புறக்கணித்து அதர்மத்தில் புத்தியைச் செலுத்துகிறவன். அவன் அரசுபுரியும் போது வேதமோதுதல் முதலான ஸன்மார்க்கங்கள் குறையத் தொடங்கின. அவன் தன் குடிகள் யாவரும் யாகஞ்செய்யக் கூடாது. அப்படிச்செய்யத் துணிந்தால் லோகபாலகனான என்னைக் குறித்தே செய்யவேண்டும் என்று விளம்பரஞ்செய்தான். மல்லிகைத் தோட்டத்தில் கள்ளிமுளைத்ததுபோல் விஷ்ணுபக்தர்கள் குலத்தில் இவன் ஜனித்தது படைக்கும் பிரமனுக்கே ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

## முனிவர் வேண்டுகோளைப் புறக்கணித்தல்

அவன் அவ்வாறு கொடுங்கோல் மன்னனாயிருக்கும்போது மரீசி முதலான மஹரிஷிகள் வேனராஜனிடம் வந்து ஓ!பிரஜாபாலகனே! யாங்கள் வெகுகாலம் யாகதீக்ஷை செய்யப்போகிறோம். தாங்கள் தடைசெய்யக்கூடாது. யாகத்திற்கு குறைவு எற்படாது பாதுகாப்பது அரசர்களுக்கு ஸ்வதர்மம் என்று வேண்டிக்கொண்டனர். அப்போது சினங்கொண்ட அவ்வேனன் அவர்களைப் பார்த்து தர்மத்தைச் சிருஷ்டிக்கிறவர் என்னையின்றி வேறு யார் உளர். மதியற்ற நீங்கள் என் மஹிமையை அறியவில்லை. நான் நினைத்தேனாகில் பூமியைத் தஹிப்பேன். கடல்களாலும் மூழ்கச்செய்வேன். இம்மாத்திரமா ? ஆகாயம், பூமி இவ்விரண்டையும் தகைவேன். ஆகையால் எனதாக்கினைப்படி நீங்கள் நடக்கவேண்டும் என்று கடிந்துபேசினான்.

## ராஜநீதி புகட்டல்.

அப்போது பொறுமையுள்ளவர்களான அம்முனிவர்கள், மதியற்றுக் கர்வங்கொண்ட அவ்வேனனுக்கு நயமாக உபதேசஞ் செய்யத்தொடங்கினர். ராஜனே! தாங்கள் சற்று முழுமனதுடன் எங்கள் சொல்லைக் கேட்கவேண்டும். ராஜனுக்கு ராஜ்யமென்பது பூமியையாளுவதற்கு உசிதமான செய்கை. பூமியென்பது வர்ணாசிரமம் முதலானவைகளையாதரிக்கத்தக்க சௌகர்யங்களுள்ளது. வர்ணங்கள் என்பவை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவை. ஆசிரமங்கள் என்பவை பிரும்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்நியாஸி என்பவை. எவனுடைய ராஜ்யத்தில் வர்ணாசிரமங்கள் தழைத்தோங்குகின்றனவோ அந்த ராஜ்யத்தில் பரமாத்மா ஸகல ஐச்வர்யங்களையும் அளிக்கிறார். மேலும் கேட்கவேண்டும். தங்கள் தங்கள் கடமையைத் தவறவிடுகிறவர்களைச் சிக்ஷிப்பது அரசன் கடமையல்லவா? அவ்வாறிருக்க நல்லவர்களின் நற்செய்கைகளைத் தடுப்பது நியாயமாகுமோ? நீதிமுறைப்படி அரசாளும் மன்னவன் ஸகல தருமங்களிலும் ஆறிலொருபங்கு பலனையடைகிறான். வர்ணாசிரமங்களைக் காப்பதற்கே பரமேச்வரர் ராஜனை ஏற்படுத்தியிருக்கிறார். அவ்வாறு பரமேச்வரனுடைய கட்டளைப்படி அரசுபுரிகிறவனுக்கு ஆயுள், ஐச்வர்யம், கீர்த்தி இவை பெருகுகின்றன. வேரூன்றாத மரங்களுக்கு ஜலம்விடுவது முதலிய முயற்சிகள் செய்தும் பயன்படுமா? ஆகையால் நல்வழியைக் கைப்பற்றி எங்களுடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்யவேண்டும். அரசன் ஸகலத்திற்கும் காரணமல்லவா? அரசன் செவ்வனே ஆளும்போது எத்திசைகளிலும் இஷ்டங்கள் சித்திக்கும். ஸகலமான கெடுதிகளும் தணியும். திசைகாப்பவர்களும் அம்மன்னனைப் பின்பற்றுவார்கள். ஆகையால் மத்யமலோகபாலகனாயிருந்தாலும் உத்தமலோகபாலகன் என்று அறிஞர் அரசரைப் புகழ்கிறார்கள். ஆகையால் சுருக்கமாய் ஒரு வார்த்தை சொல்கிறோம். தேவர்களையும் அவர்களிலும் விசேஷமாய் நாராயணனையும் குறித்து யாகஞ் செய்யப்போகிறோம். அந்த யாகம் இடையூறின்றி நடைபெறும்படி செய்து உபகரிக்கவேண்டும் என்று ஹிதோபதேசமாய் அறிவித்தனர்.

### உபதேசத்தைப் புறக்கணித்தல்.

இவ்வாறு வேனனிடத்தில் அவர்கள் உபதேசித்தது, ஒழுங்காயினும் காய்ந்த மணலில் வீழ்ந்த நீர்போலவும், கானகத்தில் ஒருவன் தன் வருத்தத்தைச் சொல்லப்புலம்புவதுபோலும் குருடனுக்குக் கண்ணாடி காண்பிப்பதுபோலவும், வீணாயிற்று. இம்மாத்திரமட்டுமல்ல, அவன் மிகுந்த சினங்கொண்டு யஜ்ஞபுருஷனை விஷ்ணுவையும், மஹாருஷிகளையும் தகாதவார்த்தைகளால் நிந்திக்கத் தொடங்கினான். வேதப்பயிற்சியால் ஜடர்களான கேடுகெட்ட பிராம்மணர்களே! அதர்மத்தைத் தர்மமாகச்செப்புகின்ற நீங்கள் சிறுவர்களே, பிழைப்பைத் தரும் வேந்தனைவிட்டு அருபியான விஷ்ணுவென்ற யாரையோ கொண்டாடுகிறீர்கள். அரசனே ஸகலதேவதாஸ்வரூபன். ஆகையால் தப்பெண்ணங்களை விட்டுவிட்டு என்னைக் குறித்தே யாகஞ்செய்யுங்கள் என்று மறுமொழி பகர்ந்தான்.

### வேனனின் நாசம்.

இவ்வாறு கூறவே அம்முனிவர்கள் சாந்தகுணத்தையே தனமாகக் கொண்வடர்களாயினும் கோபங்கொண்டவர்களானார்கள். க்ஷத்திரியபலம் எங்கே? பிரும்மநிஷ்டர்கள் பலம் எங்கே? கௌசிகரால் வஸிஷ்டரிடம் எய்யப்பட்ட அம்புகள் அவரது ஒரு பிரம்மதண்டத்தாலேயே விழுங்கப்பட்டனவன்றோ! அவர்கள் வேனனை நோக்கி, ஓ அரசனே! அநீதியைக் கைப்பற்றின அரசனிடம் செல்வம் நீடித்திராது. நிஷ்காரணமாய் அநேகரைப் புசித்த வாதாபி இல்வல என்ற அசுரர்கள் அகஸ்த்யமுனிவரிடம் விரோதித்து மடிந்தார்கள். ஆகையால் அவ்வழியில் நீ செல்ல வேண்டாம் என்றனர். அப்போதும் அவன் அப்பிராம்மணர்களைத் தகாதவார்த்தைகளால் கடிந்துபேசினபோது, அவன் மடிந்தால்தான் உலகம் நன்மைபெறும் என்று நிச்சயித்து, விஷ்ணுவின் நிந்தையாலேயே பதிதனான அவனை பிரும்மபலத்தால் ஜ்வலிக்கிற ஹுங்காரத்தால் தரையில் வீழ்த்தினார்கள். பிறகு தங்கள் தங்கள் ஆசிரமம் சென்றார்கள்.

### அரசின்மையால் துன்பம்.

அவர்கள் சென்றதும் அவன் தாயாரான சுநீதா துயரங்கொண்டு பச்சிலைச்சாறு பிழிந்து காய்ச்சின எண்ணெய்க் கொப்

பரையில் அவன் சரீரத்தைப்போட்டுவைத்திருந்தாள். இச்சந்தர்ப்பத்தில்ராஜ்யம்முழுதும் திருட்டுப்பயந்தலைப்பட்டது. ஆகாயத்தில் தூமகேது முதலிய உத்பாதங்கள் உண்டாயின. நல்லொழுக்கம் குன்றத்தொடங்கியது. உடைந்தபானையிலிருந்து நீர் ஒழுகுவதுபோல் பிரும்மநிஷ்டருடைய பிராம்மண்யமும் நழுவ ஆரம்பித்துவிட்டது.

## நிஷாதர் முதலானவரின் உற்பத்தி.

இவ்வாறிருக்கையில் மறுபடியும் அம்முனிவர்கள் விஷ்ணு பக்தரான அங்கரின் வம்சத்திலுதித்தவர் நிர்வீர்யராயிரார் என்று உறுதிகொண்டு சுநீதையிடமிருந்து அச்சரீரத்தை வரவழைத்து அச்சரீரத்தின்இடது தொடையைக்கடைந்தார்கள். அதிலிருந்து கறுப்புநிறமுள்ள ஒரு குள்ளனை புருஷன் தோன்றிக் கைகூப்பி நின்றபோது உட்காரு என்று பொருள்வாய்ந்த ( निषीद ) நிஷீத என்ற வடமொழிச் சொல்லைக் கூறினார்கள். அவனால் அவன் நிஷாதன் என்று பிரசித்திபெற்று, நிஷாதவம்சத்திற்கு மூலபுருஷனானான். மேலும், நாவிகர்களையும் விந்தியமலைப் பிராந்தத்தில் காணப்படுகிற ம்லேச்சவகுப்பாரையும், அதர்மத்தில் பற்றுள்ள கோண்டன், கோளன் என்ற நடுகாட்டாரையும் அவன் படைத்தான்.

## பிருதுவின் அவதாரம்

மறுபடியும் அவர்கள் வலதுதொடையைக் கடையவே, அதிலிருந்து ஆணும்பெண்ணுமாய் ஓர்மிதுனம்ஆவிர்ப்பவித்தது. அம்மிதுனத்தில் புருஷன் பிருது எனவும், ஸ்திரீ அர்ச்சிஸ்ஸு என்றும் அழைக்கப்பட்டனர். பகவானான நாராயணனே லோக க்ஷேமத்திற்காக இவ்வாறு தம்பதியாக ஆவிர்ப்பவித்தார். அவதரிக்கும்போதே அக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு கவசமணிந்து வில்லுடன் தோன்றினார். அவ்வில்லுக்கு ஆஜகவம்என்று பெயர். திவ்யாஸ்திரங்களும் தாமே அவரையடைந்தன. அவ்வமயத்தில் ஸகலப் பிராணிகளும் களிப்புற்றார்கள். அந்த ஸத்புத்திரனால் கொடியோனான வேனனும் (पुं) பும் எனப்படும் நரகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விண்ணுலகம் சேர்ந்தான். பிறகு ராஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்யலானார்கள்.

### பட்டாபிஷேகம்.

அப்போது ரத்னாகரங்கள் விலைமதிக்கத்தகாத இரத்தினங்களைக்கொண்டுவந்து சேர்த்தன. சதுர்முகனும் வானவர் முதலானவரோடு பட்டாபிஷேகஞ் செய்வித்தார், மஹாதேஜஸ்வியான பிருதுராஜனும் தர்மநிஷ்டர்களான ஸன்மந்திரிகளோடு மந்திராலோசனை செய்து மநுநீதிதவறாமல் ராஜ்யமாண்டான். வேனனால் கஷ்டப்படுத்தப்பட்ட குடிகள் யாவரும் பிருதுமஹாராஜனால் ரஞ்சிக்கப்பட்டார்கள். அதனால் பிருதுமஹாராஜனுக்குராஜா என்றும் ஸ்ரீ பூமிக்கு ராஜந்வதி என்றும் பெயர் பொருளுள்ளதாயிற்று. அவர் ஸமுத்திரத்துக்குச் செல்லுகையில் அச்சமுத்திரம் அசைவற்றிருந்தது. மலைகளும் வழிவிட்டன. அவரது (த்வஜம்) கொடி ஒருபொழுதும்அறுபட்டதே கிடையாது. ஸகல இஷ்டங்களும் நிறைவேறின.

### ராஜஸ்துதி.

இதே ஸமயத்தில் பிதாமஹரின் யக்ஞத்தில் முடிவு தினத்தில (सौत्यदिने) உதித்த சூதனும், மகதனும் வானவராலும் முனிவராலும அழைக்கப்பட்டு பிருதுமஹாராஜனைப் புகழும்படி தூண்டப்பட்டார்கள். அவர்களும் வருங்காலத்தில் அந்த ராஜனால் ஏற்படக்கூடிய பெருமையையும் புகழ்ந்தார்கள்.

இந்த மன்னன் ஸத்யவாதி, தானசீலர், ஸத்தியமான பிரதிக்ஞையுடையவர். அஷ்டைசுவர்யம் நிறைந்தவர். ஜயசீலர். பிரதாபசாலி. சாஸனத்தை நிறைவேற்றுகிறவர். தர்மத்தின் நுட்பமறிந்தவர். இனியமொழி பேசுகிறவர். நன்றியறிவுள்ளவர். தயாகுணம் மேலிட்டவர். கண்ணியம் வாய்ந்தவர். பிரும்மஞானி. அடக்கமுள்ளவர். வழக்கில் தீர்ந்தவர். எண்திசையதிபதிகளின் அம்சம் நிறைந்தவர். வேனனாகிற அரணியைக் கடைந்து எடுக்கப்பட்ட அக்னி. (தொடரும்)

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

## ஓர் ஸமாதானம்.

22—8—26ல் பிராமணன் பத்திரிகையில் பத்திராதிபரவர்கள் ஆர்யதர்மம் பத்திரிகையில் என்னால் வரையப்பட்டிருந்த பகவத்கீதை என்ற விஷயத்தைக் குறித்துச் சிலவாசங்கை ஏற்படுத்திக்கொண்டு வருந்துகிறார். உண்மையில் அவர்கள் சொல்

னும் விஷயம் முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது தான். இதில் நான் யாதொன்றும் எழுத முன்வரவேண்டாம். அவ்வாறே பத்திராதிபரும் தனது வியாஸத்தின் இடையில் என்னை மிகவும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். இறுதியிலும் "வித்தியாஸமாக வெண்ணாமல் இதை மன்னித்துவிடுமாறு ஸ்ரீமான் சாஸ்திரியார் அவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம்" என்கிறார், இவ்விதம் மூலையில் இருக்கும் என்னை எவ்விதமறியக்கூடுமென்று வெகுநாளாய் நினைத்ததுண்டு. சின்னாட்கட்கு முன்னால் கடலங்குடி நடேச சாஸ்திரியாரின் பிரௌடா விவாகத்திற்கு ஓர் சிறு மறுப்பெழுதியனுப்பியதுண்டு. அதினால் அவர்கள் என்னை அற்பம் அறியக் கூடும் என்றே ஸாமான்யமாய் எண்ணியிருந்தேன். அப்படியிருக்க இப்போது என்னை மிகைப்படுத்திக் கூறியிருப்பது யாதுகாரணம்பற்றியோ அறிகிலேன். நிற்க, நான் பகவத்கீதையின் சுலோகங்கள் கிருஷ்ணனாலேயே சொல்லப்பட்டனவா அல்லது கிருஷ்ணன் யுத்தகாலத்திற்கூறிய தத்துவத்தை வியாஸர் சுலோகரூபமாய் இயற்றினாரா வென்று கேட்டுக்கொண்டு இரண்டாவதை விஸ்தாரமாய்க் கூறியிருக்கிறேன். இதில் கிருஷ்ணன் சொல்லாததால் ஒருபடி குறைதான் என்று சொல்லிவிட்டதாய்ப் பத்திராதிபர் திடுக்கிட்டுவிட்டார். அவ்விதம் சொல்லவே நான் முன்வரவில்லை. அவ்விதமிருந்தால்பகவத்பாதாசார்யர்களின்பாஷ்யவசனங்களையே நான் பிரமாணமாய் எடுப்பேனா. ஆர்யதர்மத்தில் என் வியாஸங்களில் கவிகளின் காலநிர்ணயம் செய்வதைப் பற்றியே குறைகூறியிருக்கிறேன். அவ்விதமிருக்க நானேஎழுதமாட்டேன். இது எழுத நேர்ந்த காரணம் இது— சிலர் இவ்வசனங்களைப் பௌராணிகர்கள் பகிரங்கமாய்ச் சொல்வது தவறு என்றும் இது உபநிடதமென்றும் பலமாய் விவாதிக்கின்றனரென்றுகொண்டே. ஆகவே இது உபநிடதத்தின் அர்த்தத்தை அடக்கிக் கொண்டிருப்பதால் உபநிடதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்விதம் மனுஸ்மிருதி யாக்ஞவல்கியஸ்மிருதிகளோ அவ்விதம் என்று கூறிப் பௌராணிகர்கள் கீதையைப் பகிரங்கமாய் வெளியிட்டு அர்த்தம் கூறுவதில் குற்றமில்லையென்பதற்காகவே எழுதினேன் என்பதை மறுபடியும் விக்ஞாபித்துக்கொள்கிறேன். இதனால் பிராம்மணன் பத்திராதிபரவர்கள் என்மேல் அதிருப்திகொள்ளாமலிருக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

துவாபரயுகத்தில் தௌம்யாசாரியரையும், கலியுகத்தில் மூகாசாரியரையும் அதிஷ்டித்து முறையே கிருதயுகத்தில் இரண்டாயிரமும், திரேதாயுகத்தில் ஆயிரத்து ஐநூறும், துவாபரயுகத்தில் ஆயிரமும் கலியுகத்தில் ஐநூறுமாக ஸ்தோத்திரம் செய்து காமாக்ஷி ஸ்தவமென்கிறதாக உலகில் வழங்கச் செய்வேன்" என்று கூறி பின் தம்மை அந்த மகரிஷிகளெல்லாம் தூர்வாச ரென்றறியும்படிச் செய்து "என்னை நீங்கள் ஆசாரியராகப் பூஜித்து நீங்களனைவரும் எனக்குச் சீடர்களாக இருத்தல் வேண்டும்" என்றுகட்டளையிட்டு தேவியை ஆத்மார்த்தமாகப் பூஜிக்கும் நிமித்தம் பிம்பம் ரூபமாகவே அங்கிருந்தனர். தேவியும் அவருடைய பூஜையை ஏற்றுக் கொண்டிருக்கும் நிமித்தம் அவரெதிரில் வீற்றிருக்கின்றனள்.

மஹிமை.

கோதாவரிதீரத்தில் ஜமதக்னி குலத்துதித்த கிருஷ்ணவேதியான ஜயதேவரென்னும் பிராம்மணன் பஞ்சவடிதீரத்தில் அநேக நாள் வாசஞ் செய்துவருநாளில் ஊழ்வகையால் வந்த வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டு பூர்வபுண்ணிய பேரபணையால் யாத்திரைகள் செய்துவரத்தொடங்கி அனேக க்ஷேத்திரயாத்திரைகள் செய்து கடைசியில் காமகோடி க்ஷேத்திரத்தைபடைந்து அம்பிகையினுடைய தரிசனவிசேஷத்தால் வறுமைநீங்கப்பெற்று மீண்டும் தன் தேசத்தைப் போய்ச் சேர்ந்து சகல சம்பத்துடன் வாழ்ந்திருந்தனன்.

பன்னிரண்டாம் அத்தியாயம் பந்தகாசுரவதை முற்றிற்று.

---

உ

ஸ்ரீதிரிபுரசுந்தர்யை நம:

## பதின்மூன்ரும் அத்தியாயம்.

பூதபந்து வரலாறு.

(விஷய சூசனை.)

[பந்தகாசுரனைப் புதைக்கத் தொடங்கிய பொழுது அந்தப்பள்ளத்தில் தவஞ் செய்திருந்த அசுரனைத் திருமால் கொல்லத் தொடங்கிய

காலத்தில் அசுரக்கூட்டங்கள் பெருவெள்ளமாகத் தோன்ற அவைகளை யொழிப்பதற்கு இரண்டு சிவபூதங்கள் தோன்றி அவைகளை யொழித்துத் திருமாலோடு போர் செய்து தோல்வியடைந்து போகத் திருமால் நின்றார், இருந்தார், கிடந்தார் என்கிற மூன்று வித கோலங்கொண்டமையும், மூன்றுவித கோலங்கொண்ட திருமால் சிவ பூதங்களை ஹிம்சித்தது சிவாபராதம் என்றெண்ணி அது நீங்குதற்குச் சிவபெருமானைத் தியானிக்க அவரனுக்கிரகத்தால் பஞ்சதீர்த்தமுண்டாய் அவபாராதத்தைப் போக்கினமையும்பின்னர் அவ்விரண்டு பூதங்களை அத்தீர்த்தத்துக்குக் காவலாகநியமித்து அவைகளுக்கு ஆகார திருப்திகளுண்டாக்கித் திருமாலையும் அவ்விடத்தில் ஓர் திருப்பதியாகக் கொண்டிருக்கச் செய்தமையும் விளக்குவது.]

காமகோட்டமாகிய மஹாபிலத்தில் வீற்றிருக்கும் திரிபுர சுந்தரியாகிய தேவிக்கு மிகவும் சமீபஸ்தானமாகிய மேற்கில்திருமால் மூன்று விதமான திருக்கோல்மாய் விற்றிருக்கின்றனர்.

பூர்வத்தில் திரிபுரசுந்தரியாகியதேவி தேவர்களுடைய ஹிதத்தையுத்தேசித்துக்கொன்ற பந்தகனைப் புதைப்பதற்குளர்பள்ளம் தோண்டவேண்டும் என்று தன்னுடைய கால்பெருவிரலால் தன்னைக் கண்டு ஸ்தோத்திரம் செய்த தேவர்களுக்கு இடம் காட்டிய காலத்தில் அத்தேவர்கள் அவ்விடத்தில் பள்ளம் தோண்டுங்கால் மல்லகன் என்னும் அசுரன் எங்கும் தவாக்கினி வீச அதியுக்கிரமாகத் தவம் செய்வதைப் பார்த்து ஓடினர். அப்பொழுது அத்தேவர்களுக்குள் தீராகிய விஷ்ணு மூர்த்தியானவர் அவன் தவம் செய்கின்றான் என்பதை எண்ணாமல் அவனைக்கொல்லும்பொழுது அவ்வசுரனுடைய சரீரத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு ரக்த பிந்துவினின்றும் அனேக அசுரர்கள் ஒரு க்ஷணத்துக்குள் தோன்றிய பெருங் கூட்டமாய்ப் போர்க்கெழுந்தனர்.

அது கண்ட விஷ்ணுமூர்த்தியானவர் சிறிதும் இளைக்காதவராய் அந்தக் கூட்டங்களோடு போர் செய்து வரும்பொழுது அவைகள் மாளாது சிதறுகின்ற ரக்தத் துணிகளினின்றும் விருத்யாய் வருதலைப் பார்த்து உருத்திர மூர்த்தியைத் தியானிக்க அக்கணமே அவர் அங்கு எழுந்தருளித் தம்முடைய ஜடையை விரித்துப் பூமியில் தட்டி ஆண்பெண்ணாகிய இரண்டு பூதங்களை யுண்டாக்கி மேன்மேல் அசுரவிருத்திகளாகாவண்ணம் சிதறுகின்ற ரக்த பிந்துக்களை எல்லாம் உண்டுவரக் கட்டளையிட்டுப் போயினர்.

அதுபோலவே, அப்பூதங்கள் அந்த ரக்த பிந்துக்களை விடாமல் உண்டுவரவே அவ்வசுரக் கூட்டங்கள் தோன்றுதொழிந்தன. அவைகள் ஒழியவே அவர்களுடைய உதிரபானம் செய்துவந்த பூதங்கள் இரண்டும் வெறிகொண்டு மதிமயங்கி அசுரத்தன்மையடைந்து விஷ்ணுமூர்த்தியோடு போர் செய்யத் தொடங்கின. அதுகண்ட அவர் இதுவும் ஆச்சரியம் தான் என்றெண்ணி அப்பூதங்களைப்பிடித்துக் கீழேதள்ளித் தாம்மிகவும் திடமுள்ளவராய் அவைகளின்மீது காலைவைத்து அழுத்தி நின்றனர். அப்பூதங்கள் இரண்டும் அவ்விஷ்ணுவைக் கீழேதள்ளி மேலேநின்றன. விஷ்ணுமூர்த்தி அது கண்டு உக்கிரங்கொண்டு அவைகளை மீண்டும் கீழே தள்ளி அவைகள் எழுந்திரா வண்ணம் மிகவும் பலங்கொண்டு தொடைகளின்மீது உட்கார்ந்தனர். பின்னர், அப்பூதங்கள் விஷ்ணுவைக் கீழே தள்ளி விட்டு மேலுலகம் போகததலைப்பட்டன. விஷ்ணு மூர்த்தி அவைகளைக் கீழே தள்ளிக் கால்களால் மிதித்து மேலேபடுத்துக்கொண்டனர்.

பின்னர், அவை மதம்ஒழியப்பெற்று சுவபாவகுணமடைந்து விஷ்ணுவைப்பார்த்து "ஓ திருமாலே, நாங்கள் செய்தகுற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க அவைகளை விஷ்ணுமூர்த்திபார்த்து "நீங்கள் ராக்ஷஸர்களுடைய உதிரபானம் செய்தபடியால் மதம் மேலிட்டு வெறிகொண்டு சுவபாவ அறிவும்கெட்டு என்னோடு போர் செய்யத் தலைப்பட்டீர்கள். யானும் உங்களுக்கு உண்டாகிய மதத்தைப் போக்க உங்களைக் கீழே தள்ளி நின்றும் இருந்தும் கிடப்பவனுயினேன். நீங்கள் என்னோடு போர் செய்ய வந்ததும் குற்றமே, சிவபெருமானுர் ஜடையில் வந்த உங்களை நான் பங்கப்படுத்தியதும் குற்றமே" என்று தயையோடு சொல்லிவிட்டுத் திரியம்பகராயும், உமாநாதராயும், சங்கராயும், பஞ்சானனராயும் இருக்கின்ற சதாசிவ மூர்த்தியைத் தியானிக்க அவர் பிரத்யக்ஷமாய்த் தனது ஜடைமுடியிலுள்ள லோகபாவனியாகிய ஜான்னவியை ஐந்து ஜடை முடியினின்றும் பெருகிவரக் கட்டளையிட்டனர்.

அக்கங்கா தேவியும் ஜடைமுடியினின்றும் மகாப்பிரவாகமாய்ப் பெருக்கெடுத்து நதி ரூபமாய் வந்து காம கோட்டத்தில் ஐந்து முகமாய் விழுந்தனள். விழவே சிவபெருமானுர் விஷ்ணுவை

நோக்கி "இப்பூதங்கள் இதில் ஸ்நானம் செய்யுமாயின் என்னுணைக் கடந்து உன்னோடு போர்செய்த பாவத்தினின்றும் விடுபடும்" என்று கட்டளையிட, விஷ்ணுமூர்த்தி "என் பொருட்டுத் தேவரீர் உண்டாக்கிய இப்பூதங்களை யான் துவைத்தும் அடித்தும் பலவாறான அபராதங்கள் இழைத்தேனாதலால் அச்சிவாபராதம் நீங்குமாறு எனக்கும் அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்திப்ப அவரையும் அதில் மூழ்கிவரச் செய்து அத்தீர்த்தத்தின் மகிமையைக் கூறத்தொடங்கினர். "ஹே, விஷ்ணுவே இத்தீர்த்தம் எனது பஞ்சமுகத்தினின்றும் தோன்றினமையான் இது பஞ்சதீர்த்தமெனப்பெயர் பெறுக. இத்தீர்த்தததில் எவனொருவன் ஸ்நானம் செய்கின்றானோ அவன் எல்லாப்பாவங்களினின்றும் நீங்கி முக்தியடையக்கடவன். பொன் திருடினவன் ஆக்னேய திக்கிலும், சுராபானன் தக்ஷிணத்திலும், பாதாரகமனன் மேற்கிலும், பிரும்மஹத்தி புரிந்தவன் உத்திரத்திலும், இவர்கள் சிநேகிதன் பூதங்கள் மத்தியிலும் ஸ்நானம் செய்வார்களாயின் அவர்கள் அவ்வப்பாதகங்களினின்றும் விடுபட்டவர்களாய்ச் சர்வகாமங்களையும் குறைவின்றியடையப் பெறுவர். இதிற் சந்தேகமில்லை.

நீ ஆண் பெண்ணாகிய இந்த இரண்டு பூதங்களையும் இத்தீர்த்தத்தைக் காப்பாளாக ஈசான திக்குக்கும் அக்னி திக்குக்கும் நடுவில் பிரதிஷ்டை செய்து, அவைகட்கு ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய அபிஷேக தீர்த்தக் கிரகணத்தால் திருப்தியுண்டாகும் வண்ணம் நியமித்து அப்பூதங்களின் மத்தியபாகத்தின் மேலிடத்தில்முன் பூதங்களுக்காக நின்றும் இருந்தும் கிடந்தும் இருந்தது போல் மூன்று பேத ரூபங்களாகவே இருந்து உனக்கெதிரில் என்னை இலிங்க ரூபமாகப் பிரதிஷ்டைசெய்து அருச்சித்து யாவர்களுக்கும் நீ தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கின்றனவனாகவிருக்கக்கடவாய். நான்உன்னிடத்தில் பிரீதியுடையவனாகிறேன்" என்று கட்டளையிட அவ்வாறே அம்பிகையும் கட்டளையிட்டனள். விஷ்ணுமூர்த்தி இவருடைய கட்டளைப்படியே பூதங்களைப் பிரதிஷ்டை செய்து அவைகளின் மத்தியிலுள்ள விடத்தைத் தன்னிடமாகக்கொண்டு மூன்று லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து, அன்போடு வழிபட்டுப் பின் தேவர்களையும் ரிஷிகளையும் பார்த்து இந்த இரண்டு பூதங்கட்கும் பிரீதியாக வருஷம்தோறும் பூதங்